**கவனிக்க.**-2022.06.17 ஆந் திகதிய 2285 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II ( தமிழ் மொழிமூலம் ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2286 - 2022 ජූනි මස 24 වැනි සිකුරාදා - 2022.06.24**

*2286 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 212 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2022, யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, யூலை மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அமுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


211 - B 082357 - 353 (2022/06)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு - 09

## காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*சப்பிரகமுவ மாகாண சபையின் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள வெலிகபொல பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் அனுராத ஜயகொடி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் ஆளுநர் ஹென்ரி மூர் அவர்களால் 1996.08.28 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள த்/ப் 36048 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான எனும் ரன்வல முகவரியில் வசிக்கும் கொடிகார ஆராச்சிலாகெ மரத்ன என்பவருக்கு கையளிக்கப்பட்டு, இரத்தினபுரி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் 9/2615 ஆம் இலக்கத்தின் கீழ் 1997.06.25 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.07.29 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**மேற்கூறிய அட்டவணை**

*இரத்தினபுரி நிர்வாக மாவட்டத்தின் வெலிகபொல பிரதேச செயலாளர் பிரிவின் கதவெல்பத் அடகலன்கொலெ பற்றில்/ குகுலு கோறளையிலுள்ள உடரன்வல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ரன்வல கிராமத்தில் அமைந்துள்ளதும், --- நில அளவையாளர் அத்தியட்சகர் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு -- ஆம் இலக்க வெளிக்களத் தாளில் அகசி 679 இரேகை வரைதலில் லொட் 518 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் ..................... ஹெக்டெயர்/ஏக்கர் 01 றூட் ...... விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு உல்தெகென.*

*வடக்கு : காணித்துண்டு இல. கே. ஏ. பிரேமரத்ன அரச காணித்துண்டு;*
*கிழக்கு : காணித்துண்டு இல. குணசேகரகே அரச காணித்துண்டு;*
*தெற்கு : காணித்துண்டு இல. எம். ஜே. எம். அதர்பண்டாகே அரச காணித்துண்டு;*
*மேற்கு : காணித்துண்டு இல. விஜேரத்னகே அரச காணித்துண்டு.*

*அனுராத ஜயகொடி,*
*பிரதேச செயலாளர்/பிரதேச செயலகம்,*
*வெலிகபொல.*

*2022, சனவரி 31.*

*06 - 363*

---

இணைப்பு - 09

## காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மேல் மாகாண சபையின் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் சமந்திகா பிரியதர்சனீ லியனகே ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1997.02.13 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள களு. ப்ர. ஹொ. 2798 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான 323எ, அக்கர விச்ச, இங்கிரிய எனும் முகவரியில் வசிக்கும் எதிரிசிங்க ஆரச்சிகே சயிபுன் சிங்கோ என்பவருக்கு கையளிக்கப்பட்டு பாணந்துறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஓ. 38/ 242 ஆம் இலக்கத்தின் கீழ் 1997.03.07 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.07.29 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**மேற்கூறிய அட்டவணை**

*களுத்துறை நிர்வாக மாவட்டத்தின் இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவின் உடுகஹ/ ஏயிகம் பற்றில்/ கோறளையிலுள்ள 620 எப்- தொபகஸ்கந்த கிராம அலுபலர் பிரிவைச் சேர்ந்த இங்கிரிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும். நில அளவையாளர் நாயகம் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும். காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 02 றூட் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான தொம்பகஸ்கந்த மூகலான அரச காணித்துண்டு.*

வடக்கு : டப். ஜீ. குணபாலவுக்குச் சொந்தமான காணி;
கிழக்கு : எச். ஏ. சூரியஆரச்சிக்குச் சொந்தமான காணி;
தெற்கு : டீ. கே. ஹரமானிசுக்கு சொந்தமான காணி;
மேற்கு : கிராம சபை வீதி.

சமந்திகா பிரியதர்சனீ லியனகே,
பிரதேச செயலாளர்,
இங்கிரிய.

*2022, சனவரி 26.*

*06 - 364/1*

---

இணைப்பு - 09

**காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*மேல் மாகாண சபையின் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள களுத்துறை பிரதேச செயலாளர் எச். திரிமான்ன ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1982.07.26 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள களு/ப்ர/717 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான தேவகே லிசிநோனா த சில்வா என்பவருக்கு கையளிக்கப்பட்டு களுத்துறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஓ. 6/142 ஆந் இலக்கத்தின் கீழ் 1985.06.21 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் புத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.07.29 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*களுத்துறை நிருவாக மாவட்டத்தின் களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவின் களுத்துறை தொடமுனை வடக்கு, இலக்கம் 729 டீ கல்லச்ச கிராம அலுவலகர் பிரிவைச் சேர்ந்த நாகொட எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் களுத்துறை நில அளவை அத்தியட்சகர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு மு.பி.க. 1181 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 11 ஆம் இலக்க காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும், றூட் 1, பேர். 28 அளவு விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு, கல்லச்ச வன:*

வடக்கு : குடியிருப்புகளுக்கு செல்லும் வீதி;
கிழக்கு : மு. பி. க. 1181 காணித்துண்டு இலக்கங்கள் 22 (வீதி);
தெற்கு : மு. பி. க. 1181 காணித்துண்டு இலக்கம் 22, 23;
மேற்கு : மு. பி. க. 1181 காணித்துண்டு இலக்கம் 10.

எஸ். திரிமான்ன,
பிரதேச செயலாளர்,
களுத்துறை.

*2021, நவெம்பர் 11.*

*06 - 364/2*

இணைப்பு - 09

**காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின், கண்டி மாவட்டத்தில், உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர் ஆர். ஏ. டீ. ரீ. என். தென்னகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஆறாம் ஆண்டு திசெம்பர் மாதம் இருபத்து ஆறாம் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/உப/2704 ஆம் இலக்க கொடைப் பத்திரத்தின் உரித்தாளராகிய செவனக்வத்த குடியிருப்பில் வசிக்கும் குப்புசாமி முனீஸ்வரன் அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஓ. சீ. 20/190 ஆம் இலக்கத்தின் கீழ் 1997.04.23 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2022.07.10 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**மேற்கூறிய அட்டவணை**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் கந்துகர இஹல கோரலேயில் நவதேவிட்ட கிராம அலுவலர் பிரிவில் தெல்பிட்டிய என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட மு. பி. மஹ. 4339 ஆம் இலக்க மற்றும் 22 (இருபத்தியிரண்டு) எனும் காணித்துண்டு இலக்கத்தினைக் கொண்ட காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் 0.090 ஹெக்ரயார்கள் அளவான விஸ்தீரணத்தை உடையதுமான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்ட அரச காணி செவனக் குடியிருப்பு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 114 மற்றும் 21;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 21, 36 மற்றும் 35;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 35, 34 மற்றும் 23;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 23 மற்றும் 114.

ஆர். ஏ. டீ. ரீ. என். தென்னகோன்,
பிரதேச செயலாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட),
காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்.

2022, ஒகத்து 07.

06 - 365/1

---

**காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின், கண்டி மாவட்டத்தில், உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர் ஆர். ஏ. டீ. ரீ. என். தென்னகோன் ஆகிய நான், காணி அபிவிருத்தின் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ். அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து ஆறாம் ஆண்டு செத்தெம்பர் மாதம் இருபதாம் திகதி வழங்கப்பட்டுள்ள மஹ/ பிர/ 7144 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய அங்கம்மனக் குடியிருப்பில் வசிக்கும் ஷரீப்தீன் மொஹமட் ஜவுபர் அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஓ. சீ. 3/150 ஆம் இலக்கத்தின் கீழ் 1987.03.03 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவாவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திர்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ்

இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2022.07.10 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**மேற்கூறிய அட்டவணை**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் கந்துகர இஹல கோரளேயில் அங்கம்மன கிராம அலுவலர் பிரிவில் கொப்பேவல என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும். மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு மு. பி. மஹ 2694 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தில் 6 (ஆறு) ஆம் நிரல் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் 0.113 ஹெக்ரயார்கள் அளவான விஸ்தீரணத்தை உடையதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்ட அரச காணி அங்கம்மனக் குடியிருப்பு:

வடக்கு : கம்பளை வத்த கிராமம்;
கிழக்கு : கம்பளை வத்த கிராமம் மற்றும் காணித்துண்டு இலக்கம் 52;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 52 மற்றும் வீதி;
மேற்கு : வீதி மற்றும் காணித்துண்டு இலக்கம் 05.

ஆர். ஏ. ரீ. என். தென்னகோன்,
பிரதேச செயலாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட),
காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்.

2021, செத்தெம்பர் 27.

06 - 365/2

---

**காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேசச் செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் உயன்வத்தே ஜயசிங்ஹ முதியன்சேலாகே சம்பத் சுமன பண்டார ஜயசிங்ஹ ஆதிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் இலக்க உட்பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1984.11.13 ஆந் திகதி அளிப்புச் செய்யப்பட்ட மஹ/பிர/3371 ஆம் இலக்கத்தையுடைய அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான பட்டியகேலே குடியிருப்பில் வசிக்கும் கொடிதுவக்கு ஆரச்சிலாகே மியுரியல் நன்தாவதீ என்பவருக்கு அளிக்கப்பட்ட கண்டி மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் எல்டிஒ/ஜி/146/938 என்ற இலக்கத்தின் கீழ் 1985.10.11 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்ட ரீதியான உரிமையாளர் எவரும் இல்லை என்பதனால் அல்லது சட்ட ரீதியான உரிமையாளர் இருப்பினும் அவர் பின்னுரிமையாளராவதற்கு விருப்பம் இல்லை என்பதனால் பின்னுரிமையாளர் ஒருவர் நியமிப்பதற்கு இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளமையினால் இவ் அளிப்புப் பத்திரத்தினை மேல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் இலக்க உட்பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத் தருகின்றேன் இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2022.07.10 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

**மேற்கூறிய அட்டவணை**

கண்டி நிருவாக மாவட்டத்தின் கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் கங்தஹய வடக்கு கோறளையின் தென்னைகும்புர கிராம அலுவலர் பிரிவின் தென்னைகும்புர எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் அத்தியட்சகரின் மூலம் தயாரிக்கப்பட்டதும் மற்றும் அவர் பொறுப்பில் உள்ள இலக்கம் 1 25/22 கொண்ட வெளிக்களப் பத்திரத்தில் இலக்கம் பி. பி. மஹ 407 கொண்ட வரைபடக் குறிப்பில் இலக்கம் 83 கொண்ட நிலன் பகுதியாக காட்டப்பட்டுள்ள, அளவில் பேர்ச்சஸ் 28 ஆக பாரியளவில் உள்ள கீழே தரப்பட்டுள்ள முறையில் எல்லைகளை கொண்டதுமான அரச காணி பட்டியகேலே குடியிருப்பு.

வடக்கு : பிரதான நுழைவாயில;
கிழக்கு : தோட்டத்திற்கு செல்லும் பாதையின் ஒதுக்கு நிலம்;
தெற்கு : துண்டு இல. 86;
மேற்கு : பிரதான நுழைவாயில்.

யூ. ஜே. எம். எஸ். எஸ். பீ. ஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை.

2022.02.20

06 - 365/3

---

**காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் பஸ்பாகே கோரளே பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் (மாகாணங் களுக்கு இடையிலான) ஆர். எம். ஷமீர நுவன் ரத்னாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1996.08.16 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/பஸ்/929 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய கடுகிதுல கிராமம் நாவலப்பிட்டி என்ற முகவரியில் வசிக்கும் லியனகே ஆரியபால அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல். ஈ. ஓ. ஏ6/17 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.12.19 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்த போதிலும் அவர் பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை எனஅறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2022.07.10 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**மேற்கூறிய அட்டவணை**

கண்டி நிருவாக மாவட்டத்தில் பஸ்பாகே கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் பஸ்பாகே கோரளை வெளிகொடவத்த கிராம அலுவலர் பிரிவில் வரகாவ என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க வெளிக்களம் பத்திரத்தில் - இலக்க துண்டாடப்படும் வரைபடத்தில் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க நிரல் குறிப்பில் - ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் ஏக்கர் 01 றூட்கள் 03 பேர்ச்ஸ்கள் 30 விஸ்தீரணத்தை உடையதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரசகாணி கடுகித்துல குடியிருப்பு:

வடக்கு : பலுன் நீர்வீழ்ச்சி வழி பாதுகாப்பு;
கிழக்கு : கடுகிதுல நீர் ஓடை;
தெற்கு : லீலாவதினுடைய இடம்;
மேற்கு : நீர் பாதுகாப்பு வலயமும் ஜயசிங்கவுடைய இடம்.

ஆர். எம். ஷமீர நுவன் ரத்னாயக்க,
பிரதேச செயலாளர்,
பஸ்பாகே கோரளை.

2022, பெப்புருவரி 18.

06 - 365/4

**காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் பஸ்பாகே கோரளே பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) ஆர். எம். ஷமீர நுவன் ரத்நாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1996.10.07 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/பஸ்/967 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய கட்டுகிதுல குடியிருப்பில் வசிக்கும் மெதகெதர சிறிசேன அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் யு/6/35 ஆம் இலக்கத்தின் கீழ் 1997.02.20 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்த போதிலும் அவர் பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்னமையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை எனஅறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப் பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2022.07.10 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.*

**மேற்கூறிய அட்டவணை**

*கண்டி நிருவாக மாவட்டத்தில் பஸ்பாகே கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் பஸ்பாகே கோரளை வெளிகொடவத்த கிராம அலுவலர் பிரிவில் வரக்காவ என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தல் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட – ஆம் இலக்க வெளிக்களம் பத்திரத்தில் – ஆம் இலக்க துண்டாடப்படும் வரைபடத்தில் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பி.பி.மஹ. 7142 ஆம் இலக்க நிரல் குறிப்பில் 27 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் ஏக்கர் 02 றூட்கள் – பேர்ச்ஸ்கள் – விஸ்தீரணத்தை உடையதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி கட்டுகித்துல குடியிருப்பு :*

வடக்கு : கட்டுகித்துல ஓடைக்குரிய ஒதுக்கப்பட்ட துண்டு;
கிழக்கு : புஞ்சி உக்குகே சாணி மற்றும் ஒதுக்கப்பட்ட துண்டு;
தெற்கு : ஜயசேகவின் காணி;
மேற்கு : கட்டுகித்துல ஓடைக்குரிய ஒதுக்கப்பட்ட துண்டு.

ஆர். எம். ஷமீர நுவன் ரத்காயக்க,
பிரதேச செயலாளர்,
பஸ்பாகே கோரளே.

*2022, பெப்புருவரி 21.*

*06 - 365/5*

---

**காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் பஸ்பாகே கோரளே பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) ஆர். எம். ஷமீர நுவன் ரத்நாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1983.05.09 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மஹ/பீர்/2757 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய மெரொக் குடியிருப்பில் வசிக்கும் கருமுனி அரச்சிலாகே குசுமாவதி அவர்களுக்கு வழங்கி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் யு1/185 ஆம் இலக்கத்தின் கீழ் 1985.10.07 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்த போதிலும் அவர் பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை எனஅறிக்கையிடப்பட்டு உள்ளதால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய*

சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2022.07.10 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**மேற்கூறிய அட்டவணை**

கண்டி நிருவாக மாவட்டத்தில் பஸ்பாகே கோரளே பிரதேச செயலாளர் பிரிவில் பஸ்பாகே கோரளே தண்டுபெந்திருப்ப கிராம அலுவலர் பிரிவில் வாரகாவ் மற்றும் பெனிதுடுவ என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும் - நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட டு10/ 01 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தில் - ஆல் தயாரிக்கப்பட்ட ஆம் இலக்க “துண்டாடப்படும் வரைபடத்தில் - ஆல் தயாரிக்கப்பட்ட பீபீ மஹ 463 ஆம் இலக்க நிரல் குறிப்பில் 118 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் எக்கர் - றூட் 01 பேர்ச்சஸ்களை 37 விஸ்தீரணத்தை உடையதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி ஷம்ரொக் குடியிருப்பு:

வடக்கு : இலக்கம் 109 மற்றும் 110;
கிழக்கு : இலக்கம் 110 மற்றும் குடியிருப்பு பாதை;
தெற்கு : இலக்கம் 119;
மேற்கு : இலக்கம் 108.

ஆர். எம். ஷமீர நுவன் ரத்காயக்க,
பிரதேச செயலாளர்,
பஸ்பாகே கோரளை.

2022, சனவரி 26.

06 - 365/6